பத்திரிக்கை வெளியீடு
Reserve Bank of India

தகவல் தொழில் நுட்பத்துறை, மைய அலுவலகம், எஸ்.பி.எஸ் மார்க், மும்பை 400001
DEPARTMENT OF COMMUNICATION, Central Office, S.B.S. Marg, Mumbai – 400001
போன் Phone: 91 22 2266 0502

இந்திய ரிசர்வ் வங்கி
வெப்சைட் Website: www.rbi.org.in
இ மெயில் Email: helpdoc@rbi.org.in

மே 27, 2020

**சிவம் சஹகாரி பாங்க் லிமிடெட், இச்சல்கரஞ்சி, மாவட்டம் - கோலாப்பூர், மகாராஷ்டிரா நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட வழிகாட்டுதல் உத்திரவுகள் - கால நீட்டிப்பு**

இந்திய ரிசர்வ் வங்கி (மே 18, 2018 தேதியிட்ட DCBS.CO.BSD-I/D-6/12.22.351/2017-18 உத்தரவின்படி) சிவம் சஹாகரி பாங்க் லிமிடெட், இச்சல்கரஞ்சி, மாவட்டம், கோலாப்பூர், மகாராஷ்டிரா நிறுவனத்தை மே 19,2018 அன்று வர்த்தகம் முடிவடைந்ததிலிருந்து வழிகாட்டுதல் உத்திரவின் கீழ் வைத்தது.

2. இந்திய ரிசர்வ் வங்கி, 1949 ஆம் ஆண்டு வங்கியியல் ஒழுங்குமுறைச் சட்டத்தின் பிரிவு 35 A இன் துணைப்பிரிவு (1) உடன் இணைந்தப் பிரிவு 56 இன் கீழ் தனக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி, மேற்கூறிய வழிகாட்டுதல் உத்தரவுகளின் செல்லுபடிக் காலத்தை மே 21, 2020 தேதியிட்ட DOR.CO.AID/D-81/12.22.351/2019-20 உத்தரவின் படி, ஜூலை 31, 2020 ஆம் தேதி வரை மறு ஆய்வுக்கு உட்பட்டு, தொடர்ந்து நீட்டிக்கிறது என்பதைப் பொதுமக்களின் தகவலுக்காக அறிவிக்கிறது.

3. மேற்கண்ட கால நீட்டிப்பை அறிவிக்கும் உத்தரவின் நகல், வங்கியின் வளாகத்தில் பொதுமக்களின் பார்வைக்காக வைக்கப்படும்.

4. இந்திய ரிசர்வ் வங்கியின் மேற்கூறிய கால நீட்டிப்பு மற்றும் / அல்லது திருத்தங்களால் வங்கியின் நிதி நிலைமையில் கணிசமான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது குறித்து இந்திய ரிசர்வ் வங்கி திருப்தி அடைந்துள்ளதைக் குறிக்காது.

**(யோகேஷ் தயால்)**
தலைமை பொது மேலாளர்

**பத்திரிக்கை வெளியீடு: 2019-2020/2405**